காரைக்குடி நகராட்சி
28.03.2018 ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்
தலைமை: திருமதி.அ.சுந்தரம்பாள் ஆணையர் மற்றும் தனிஅலுவலர்
மன்றப் பொருட்கள்

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| **28.03.2018** | **1** | நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7234/14/ஆர்1. நாள்.15.3.2018 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.33 அறிவிப்பு நாள்.25.01.2018 ஆகிய கடிதங்களில், நகராட்சி பகுதிகளில் செயல்படும் அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் (சுயநிதி பாடப் பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள் , நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் 2017–2018 இரண்டாம் அரையாண்டிலிருந்து சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் தமிழ்நாடு அரசிதழ் ஆகியவை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 82ன்படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6– A படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் –2018, (2018, தமிழ்நாடு சட்டம் 6)–ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)க்கு கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.<br><br>**AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920**<br><br>**5. In section 83 of the Tamil Nadu District Municipalities Act, 1920, in sub – Section (1), -** | தீர்மான எண். 390 அலுவலகக்குறிப்பு பதிவு செய்யப்பட்டது. |

**(1) for clause (c) the following clause shall be substituted, namely:-**

**‘’(c) buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or Municipality or any other local authority or Institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or animals and orphanages, home and schools for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council:**

**Provide that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self- financing courses shall be subject to levy of property tax.,’’**

**(2) in the provison, for the Expression ‘’Clauses (a) and (c) and (e)” , the expression ‘’clauses (a) and (e)” shall be substituted.**

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிங்கள் மீது சொத்து வரிவிதிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி,விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட் ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கப்பட வேண்டும்.

- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 83(1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கப்பட வேண்டும்.

- கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின்

<table>
<tr><td></td><td></td><td>
உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்து வரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கப்பட வேண்டும்.<br><br>
• தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து, மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட வேண்டும்.<br>
அலுவலகக் குறிப்பு<br>
1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>
2. விளம்பரம் செய்யும் பணிக்கான கட்டணம் பொது நிதியிலிருந்து வழங்கலாம்.
</td><td></td></tr>
<tr><td></td><td>2</td><td>
2018– 2019ஆம் ஆண்டிற்கு காரைக்குடி நகராட்சியில் பயிற்சி நிமித்தமாக வெளியூர் செல்லும் பணியாளர்களுக்கு மற்றும் அலுவலகப் பணி சம்பந்தமாக வெளியூர் செல்லும் அலுவலக பணியாளர்களுக்கு ஆகும் பிராயாணப்படி உத்தேச செலவினத் தொகை ரூ.3,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>
அலுவலகக் குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
(ந.க.எண்.2038/2017/பி2)
</td><td>தீர்மான எண். 391<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>3</td><td>
இந்நகராட்சி வளர்ச்சி திட்டங்கள் மற்றும் பிறபணிகளுக்கு கீழ்க்கண்ட விபரப்படி தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>வ.எண்.</td><td>விளம்பர விபரம்</td><td>விளம்பரம் செய்த நாளிதழ்/ நாள்</td><td>தொகை ..</td></tr>
<tr><td>1</td><td>காரைக்குடி நகராட்சியில் Amrut 2017–2020 திட்டத்தின் கீழ் சூடாமணிபுரம் பகுதியில் பூங்கா அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியது</td><td>மக்கள் குரல்<br>15.01.2018</td><td>ரூ.69304/–</td></tr>
<tr><td>2</td><td>காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு</td><td>மக்கள் குரல்<br>11.11.2017</td><td>ரூ.69304/–</td></tr>
</table>
</td><td>தீர்மான எண். 392<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td></td><td>பணிக்காக ஓராண்டிற்கு வெளிக் கொணர்வு (Out Sourcing) ஒப்பந்தப்புள்ளி கோரியது</td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td>ரூ.138608/–</td></tr>
</table>
மேற்கண்ட பட்டியலின்படி தொகை ரூ.1,38,608/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.
</td><td></td></tr>
<tr><td></td><td>4</td><td>இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு 7–ல் 17.5 HP நீர்மூழ்கி மோட்டார் பம்ப் இயங்கவில்லை, நீர்மூழ்கி மோட்டார் பம்பை Meger Testing ல் செய்து பார்த்ததில் Motor Coil winding பழுது ஏற்பட்டுள்ளது. எனவே, குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நீர்மூழ்கி மின் மோட்டார் பம்பை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.27,000/– க்கும் டெக்கான் நிறுவனம் மூலம் பணி செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>தீர்மான எண். 393<br>அலுவலகக்குறிப்புகள் அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>5</td><td>இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு 5–ல் 15 HP நீர்மூழ்கி மின் மோட்டார் பம்ப் இயங்கவில்லை. எனவே நீர்மூழ்கி மின் மோட்டார் பம்ப் Meger Testing ல் செய்து பார்த்ததில் Motor Coil winding பழுது ஏற்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி உடன் சரி செய்யஆகும் உத்தேச செலவினம் ரூ.27,500/– க்கும் டெக்கான் நிறுவனம் மூலம் பணி செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>தீர்மான எண். 394<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 6 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டம்பர் பிளேசர் வாகனம் TN63 T2437 பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.130000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) அனுமதிக்கலாம்.<br>2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 395<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது. |
| | 7 | காரைக்குடி நகராட்சி பகுதியில் சேகரமாகும் மட்கும் குப்பைகளை தனியாக சேகரித்து மற்றும் நகரின் முக்கிய இடங்களில் குப்பைகளை போடவும் 210 லிட்டர் கொள்ளவு கொண்ட பிளாஸ்டிக் டிரம் வாங்கிக் கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.48000/— க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியில் இருந்து வழங்கப்பட்ட துாய்மை இந்தியா திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதியின் கீழ் இச்செலவினத்தை மேற்கொள்ளலாம்.<br>3) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 396<br>அலுவலகக்குறிப்புகள் அனுமதிக்கப்பட்டது |
| | 8 | காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN63Y 4951 தகுதி சான்று பெறுவதற்கு வாகனம் நிறுத்தப்பட்டுள்ளதாலும் தனியார் மய துப்புரவு பணி மய வாகனம் நிறுத்தப்பட்டதாலும் தற்போது பொது சுகாதாரப் பணி பாதிக்கப்படாமல் இருக்க அவசர அவசியம் கருதி நகராட்சிக்கு ஒரு டிப்பர் லாரி வாடகைக்கு அமர்த்திக் கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி நகர்மன்ற தீர்மான எண்.300 நாள் 29.12.2017 மற்றும் 318 நாள் 31.01.2018—ல் 01.01.2018 முதல் 31.01.2018 வரை ஒரு மாதத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் பொது சுகாதாரப் பரிவு வாகனம் TN63Y 4951 தகுதி சான்று பணி முடிவடைவதால் மேலும் மூன்று மாதத்திற்கு 01.02.2018 முதல் 30.04.2018 வரையிலான காலத்திற்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள விலை விகிதித்தில் வாகனத்தை அமர்த்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.135000/— மற்றும் மூன்று மாதத்திற்கு உரிய மிகாமல் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண். 397<br>அலுவலகக்குறிப்புகள் அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>அலுவலகக் குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>9</td>
<td>காரைக்குடி நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் 1) கழனிவாசல் நகர்மன்றப் பள்ளி 2) வ.உ.சி நகர்மன்றப் பள்ளி 3) ஆர்.எம்.எஸ்.ஆர்.எம் நகர்மன்றப்பள்ளி 4) பி.ஆர். சின்னையா அம்பலம் நகர்மன்றப்பள்ளி 5) ஆலங்குடியார் நகர்மன்றப் பள்ளி பாரதி நகர்மன்றப் பள்ளி போன்ற பள்ளிகளில் சுகாதாரமான முறையில் நாப்கின்களை Ash Burning Machine கொண்டு எரித்து சாம்பலாக்குவதற்கு 5 எண்ணம் சிறியது மற்றும் 1 எண்ணம் பெரியது ஆக மொத்தம் 6 எண்ணம் Ash Burning Machine வாங்க ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.150000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1) அனுமதிக்கலாம்<br>2) இச்செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3) தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 398<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>10</td>
<td>இந்நகராட்சி பகுதியில் பராரியாய் சுற்றித் திரியும் நாய்களை பிடித்து, கருத்தடை அறுவை சிகிச்சை செய்து, அவைகளுக்கு தேவையான உணவு வழங்கி மீண்டும் நாய்களை பிடித்த இடத்தில் திருப்பி கொண்டு வரும் பணிக்கு 16.03.2018 அன்று கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை நாய் ஒன்றுக்கு ரூ.</th></tr>
<tr><td>1</td><td>விவேகா அறக்கட்டளை<br>48 /49 தொண்டியார் தெரு, தேவகோட்டை</td><td>ரூ.445/–</td></tr>
<tr><td>2</td><td>வெல்பேர் அசோசியலிஸ் பார்ரூரல் மாஸ்<br>5 மாதவன் நகர், திருப்புவனம் புதூர் ,<br>திருப்புவனம்</td><td>ரூ.550/–</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய விவேகா அறக்கட்டளை, தேவகோட்டை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 399<br>அலுவலகக்குறிப்புகள் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக் குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | **11** | காரைக்குடி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அன்றாடம் சேகரம் ஆகும் மட்கும் மற்றும் மக்காத குப்பை மாதிரிகளை கீரின்லின்ங் அனாலிடிக்கல் மற்றும் ரிசர்ச் லேபரேட்டரி (இந்தியா ) பிரைவேட் லிமிடெட், கோவையில் பரிசோதனை செய்து அதன் அறிக்கை பெற்றமைக்கு ரூ.15222/—ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 400<br>அலுவலகக்குறிப்புகள் அனுமதிக்கப்பட்டது |
| | **12** | காரைக்குடி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இன்சினேட்டர் சாதனம் Ash Burning Machine சப்ளை செய்ய 02.03.2018—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. | தீர்மான எண். 401<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது |

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் (ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | ஸ்ரீகணேசன் அக்ரோ ஏஜென்சி 16 கிரவுண்ட் நகர் பாதாரக்குடி , மானகிரி, காரைக்குடி | ரூ.29000+18% GST Tax |
| 2 | எஸ்.ஆர்.எச். டிரேடர்ஸ் மேட்டுபாளையம் | ரூ.31500/ +18% GST Tax |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிறுவனமான பரிகணேஷ்சன் அக்ரோ ஏஜென்சி, பாதரக்குடி மானகரி, காரைக்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :

1.அனுமதிக்கலாம்

2.மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td>13</td><td>காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான ஆண்டுக் குத்தகை இனங்கள் 2018–2021ம் ஆண்டிற்கான மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஒன்பது இனங்களுக்கு 22.02.2018 அன்று கோரப்பட்டது. மேற்படி 9 இனங்களுக்கும் ஏலத்தில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. முடியரசன் சாலையில் அமைந்துள்ள நவீன பூங்காவில் தினசரி நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு 19.01.2018, 07.02.2018 மற்றும் 22.02.2018 மூன்று முறை ஏலம் கோரப்பட்டதில் எவரும் கலந்து கொள்ளவில்லை. தற்போது ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் கீழ்க்காணும் விபரப்படி கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ.எண்.</td><td>ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்)</td><td>அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ.</td></tr>
<tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார், 281 வள்ளுவர் சாலை சூடாமணிபுரம், காரைக்குடி</td><td>4,40,000/–</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற ஒரே ஓர ஒப்பந்தப்புள்ளியில் திரு.டி.செந்தில்குமார் என்பவர் ரூ.4,40,000/–க்கு கோரியுள்ளார். மூன்றாண்டு சராசரி தொகை ரூ.12,65,426/–ஐ விட குறைவாகவும் சென்ற ஆண்டு குத்தகைத் தொகை ரூ.15,31,249/–ஐ விட குறைவாக உள்ளது. எனவே மேற்படி இனத்திற்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.6147/2017/அ1)</td><td>தீர்மான எண். 402<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>14</td><td>இந்நகராட்சி குடிநீர் நிதி 2017–2018ன் கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி ஆழ்குழாய் கிணறுகளுக்கு திரவ குளோரின் (Sodium Hypo Chloride) சப்ளை செய்தல் பணிக்கு 25.12.2017–ல் தனி அலுவலர் முன் அனுமதி அளித்ததின் பேரில் 09.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><td>வ. எண்.</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>ஸ்ரீராஜ கணபதி இன்ஜினியரிங்</td><td>மதிப்பீட்டைவிட – 0.61 %குறைவு</td></tr>
</table></td><td>தீர்மான எண். 403<br>அலுவலகக்குறிப்புகள் அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td></td><td>ஒர்க்ஸ், சென்னை</td><td></td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீசபர் இன்ஜினியரிங் , சென்னை</td><td>மதிப்பீட்டைவிட – 1.82 % அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீராஜ கணபதி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.61% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக்குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
</td><td></td></tr>
<tr><td></td><td>15</td><td>இந்நகராட்சி ஈப்பு வாகன எண்.TN63T3333 வாகனம் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, வாகனத்தை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.79000/–க்கும் அரசு அங்கீகாரம் பெற்ற M/S, மகேந்திரா நிறுவனம் மூலம் பழுதுகள் நிவர்த்தி செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக்குறிப்பு :<br>
1. அனுமதிக்கலாம்<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>தீர்மான எண். 404<br>அலுவலகக்குறிப்புகள் அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>16</td><td>இந்நகராட்சியில் உள்ள கல்லுக்கட்டி கணினி வசூல் மையத்தில் இயங்கி வரும் Dot Metrix Printer அடிக்கடி பழுது ஏற்படுவதால், வசூல் நேரத்தினை கருத்தில் கொண்டு உடனடியாக புதியது 1 (ஒன்று) மாற்றம் செய்யவும், புதிய வசூல் மையம் மகர்நோன்பு பொட்டல் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கும் 1 எண்ணம் புதியது வாங்கவும் ஆக மொத்தம் 2 எண்ணம் Dot Metrix Printer வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.19000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக்குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>தீர்மான எண். 405<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்றுக்<br>கொள்ளப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **17** | இந்நகராட்சியில் கீழ்கண்ட பிரிவுகளில் உள்ள கணினியில் உள்ள பழுதுகள் மற்றும் ஜெராக்ஸ் மிஷின் பழுதுகள் ஆகிய பழுதுகளை உடன் சரி செய்ய வேண்டியுள்ளது.<br><br>1 \| பொறியியல் பிரிவு \| Konica 215, Drum, Heat Roller<br>2 \| கணினி பிரிவு \| 1. Richo Xerox- Drumkit, Developer, Cleaning blade 2. 500 GB Hard Disk, Mother Board 2GB RAM, SMPS 3. UPS Battery – 2Nos For CCTV<br>3 \| கணக்கு பிரிவு \| 1.Lenova System – 1TB Hard disk 2 GB Ram 2.UBS Battery – 2nos<br>4 \| வசூல் பிரிவு \| Dot Matrix Printer – Tractor - INO<br>5 \| சுகாதாரப் பிரிவு \| Computer – 500 GB Hard Disk<br><br>மேற்கண்ட பழுதுகளை உடன் சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 406<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டது |
| | **18** | இந்நகராட்சி ஈப்பு வாகன எண்.TN63T3333 வாகனத்திற்கு நான்கு டயர்களும் ஐம்பதாயிரம் கி.மீ. மேல் ஓடி உள்ளதால் மிகவும் பழுதடைந்து வண்டி இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே புதிய நான்கு டயர்கள் மாற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.39000/–க்கும், அரசு அங்கீகாரம் பெற்ற M/s மகேந்திரா நிறுவனம் மூலம் புதிய டயர்கள் வாங்குதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :<br>1. மன்றம்அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண். 407<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 19 | காரைக்குடி நகரில் தினசரி உற்பத்தியாகும் குப்பைகளை தரம் பிரித்தல், உரமாக மாற்றுதல் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை கையாளுதல் போன்ற பணிகளுக்காக, திடக்கழிவு மேலாண்மை திட்டம் – 2014–2015ன் கீழ் நகராட்சி உரக்கிடங்கில் ரூ.240.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டமைப்பு வசதிகள் மற்றும் உரிய இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேற்கண்ட பணிகளை ஆண்டு பராமரிப்பு முறையில் இயக்கிடவும் மற்றும் பராமரித்திடவும் (O&M) ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் உரக்கிடங்கில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களை கொண்டு அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்தல், உரமாக மாற்றுதல் போன்ற பணிகளை தற்காலிகமாக மூன்று மாதங்களுக்கு ஏதேனும் டிரஸ்ட் நிறுவனம் மூலம் தேவையான பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தின்படி பணிக்கு அமர்த்தி, உரக்கிடங்கில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களை இயக்குதல் மற்றும் குப்பைகளை கையாழுதல் பணிகளை செய்திடலாம்.<br><br>3 மாதத்திற்கு தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் அவர்களுக்கான ஊதியம்<br>குப்பைகளை கையாளுதல் - 17மஸதூர்x 271.00x85 நாள் = 391595<br>ஆப்ரோட்டர் – 1 நபர் x 332.00 x85 நாள் = 28220<br>சுப்பர்வைசர் – 1 நபர் x332.00 x85 நாள் = 28220<br>––––––––<br>**448035**<br>EPF 12% = 53764<br>----------<br>மொத்தம் = 501799<br>––––––<br><br>மேற்கண்டவாறு பணியாளர்களைக் கொண்டு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியை 3 மாத காலத்திற்கு மேற்கொள்ளவும், அதற்கான செலவுத் தொகைக்கும் நகர்மன்ற தீர்மானம் எண். 274 நாள் 31.11.2017ல் ஒப்புதல் பெறப்பட்டது. இந்நிலையில் நிர்வாக அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றிட சற்று காலதாமதம் ஏற்படுவதாலும், பணியினை தொடர்ந்து மேலும் 3 மாத காலத்திற்கு தற்போது பணி செய்து வரும் M/s Collective Organisation for Rural Education Turst, Jolarpet என்ற நிறுவனம் மூலம் பணி செய்திடவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.5.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண். 408<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>அலுவலகக் குறிப்பு :<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>20</td><td>காரைக்குடி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஆண்டுக் குத்தகை இனங்கள் 2018–2019ம் ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.01.2018, 07.02.2018, 22.02.2018, 07.03.2018, 16.03.2018, 21.03.2018, மற்றும் 29.03.2018 ஆகிய தேதிகளில் கோரப்பட்டதில் 1. இராஜாஜி பேருந்து நிலையத்திற்குள்ளும் மற்றும் புதிய பேருந்து நிலையத்திற்குள்ளும் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமை.2.கழனிவாசல் செக்காலை ரோட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆடுவதை செய்யும் இடத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை. 3.முடியரசன் சாலையில் அமைந்துள்ள நவீன பூங்காவில் தினசரி நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி ரூ.503000/–க்கு பெறப்பட்டுள்ளது. மற்ற 2 இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வராததால் 01.04.2018 முதல் துறை மூலம் வசூல் செய்யவும் மேற்படி மூன்று இனங்களுக்கு ஏலம் ஒப்படைக்கும் நாள்வரை துறைமூலம் வசூல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.6147/2018/அ1)</td><td>தீர்மான எண். 409<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>21</td><td>காரைக்குடி நகராட்சியில் மத்திய, மாநில அரசு நிதியில் கீழ்கண்டவாறு பல்வேறு திட்டப் பணிகள் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.
<table>
<tr><th>வ.எண்.</th><th>திட்டத்தின் பெயர்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>அடிப்படை கட்டமைப்பு இடைவெளி</td><td>பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் கட்டுதல்</td><td>260.00</td></tr>
<tr><td>2</td><td>நிரப்பு நிதி 2014–2015</td><td>கணேசபுரத்தில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுதல்</td><td>230.00</td></tr>
<tr><td>3</td><td>அம்ரூத் திட்டப் பணி 2015–2016</td><td>4– பூங்கா மேம்பாடு செய்தல் பணி</td><td>264.00</td></tr>
<tr><td>4</td><td>அம்ரூத் திட்டப் பணி 2016–2017</td><td>5– பூங்கா மேம்பாடு செய்தல் பணி</td><td>264.00</td></tr>
</table></td><td>தீர்மான எண். 410<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>5</td><td>அம்ரூத் திட்டப் பணி 2017–2016</td><td>1– பூங்கா மேம்பாடு செய்தல் பணி</td><td>68.402</td></tr>
<tr><td>6</td><td>மீன்வள துறை நித 2017–2018</td><td>கழனிவாசல் பகுதியில் நவீன மீன் நாளங்காடி கட்டுதல்</td><td>100.00</td></tr>
<tr><td>7</td><td>தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத் திட்டம்</td><td>அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் தங்கும் விடுதி கட்டுதல்</td><td>70.00</td></tr>
<tr><td>8</td><td>TURIP 2017- 2018</td><td>சாலை பணிகள்</td><td>100.00</td></tr>
<tr><td>9</td><td>14th Finance Committee Fund</td><td>சாலை பணி, குடிநீர் பணி</td><td>150.00</td></tr>
</table>
மேற்கண்ட திட்டப் பணிகளை தவிர்த்து பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறன்றன. மேலும் நீர்நிலைகள் மேம்பாடு திட்டப்பணிகள் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணியினால் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைத்து புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரிய அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேற்கண்டவாறு நடைபெறும் திட்டப் பணிகளை கண்காணித்திடவும் திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது உயர் அலுவலர்களால் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பித்தல், புகைப்படங்கள் எடுத்தல் அதில் பணியின் பெயர் தட்டச்சு செய்து அனுப்புதல் மற்றும் அவ்வப்போது கோரப்படும் திட்டப் பணிகளுக்கு கருத்துருக்கள் தயார் செய்தல் போன்ற பணிகளை செய்திட உதவி பொறியாளர் ஒருவர் மட்டும் உள்ளதால் அவருக்கு உதவியாக கணினி தட்டச்சு மற்றும் Auto cat தெரிந்த ஒரு நபரை தேவைப்படும் நாட்களுக்கு OutSourcing முறையில் பணிக்கு அமர்த்தி கொள்ளவும் அதற்காக மூன்று மாத காலத்திற்கான உத்தேச செலவு தொகை ரூ.30,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு<br>
பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>22</td>
<td>காரைக்குடி நகராட்சிக்கு மட்கும் குப்பைகளை தனியாக சேகரிக்கவும் மற்றும் நகரின் முக்கிய இடங்களில் 210 லிட்டர் கொள்ளவு கொண்ட பிளாஸ்டிக் ஊதா கலர் டிரம் வாங்கிட விலைப்புள்ளிகள் கோரியது கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>வ.எண் .</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>பேரல் ஒன்றில் விலை</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண். 411<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>திரு.ஆர்.கதிரவன்<br>திரு.அண்ணாமலை பேன்சி<br>கல்லுக்கட்டி மேற்கு,காரைக்குடி</td><td>ரூ1000/–</td></tr>
<tr><td>2</td><td>ரேடியோ பேலஸ்<br>2 தேரோடும் வீதி, கல்லுக்கட்டி தெற்கு, காரைக்குடி.</td><td>ரூ.1150/–</td></tr>
<tr><td>3</td><td>என்.ஆர்.சாமி ஸ்டோரிங், காரைக்குடி</td><td>ரூ.1050/–</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.கதிரவன், திரு.அண்ணாமலை பேன்சி, காரைக்குடி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>
அலுவலகக் குறிப்பு<br>
1.அனுமதிக்கலாம்.<br>
2.தனிஅலுவலர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>23</td>
<td>காரைக்குடி நகராட்சி பகுதியில் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் பரவாவண்ணம் தடுக்கும் பொருட்டு கொசு தடுப்பு பணியாளர்கள் 50 வீடுகளுக்கு ஒரு நபர் விதம் பணி அமர்த்தி கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களாலும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.156 நாள் 31.07.2017–ல் அனுமதித்தின் பேரில் அதே விலை விகிதத்தில் ஒவ்வொரு மாதம் 20 நபர்களை ஏப்ரல் 2018 முதல் ஜீன் 2018 வரை கொசு தடுப்பு பணியாளர்களை அமர்த்தி கொள்ளவும், மேலும் புகை தெளிப்பான்களுக்கு தேவையான சிலிண்டர், பிளிசிங் பவுடர் மற்றும் இப்பணிக்கு தேவையான இதர பொருட்கள் வாங்கவும் ஆகும் செலவு தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. தனிஅலுவலர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 412<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>24</td>
<td>. காரைக்குடி நகராட்சி, தேவகோட்டை ரஸ்தா செல்லும் சாலை அருகில் பாதாள சாக்கடை கழிவு நீர் சேகரிப்பு தொட்டி அமைப்பதை வேறு இடத்திற்கு மாற்றக் கோரி ரஸ்தா பொது மக்கள் உண்ணாவிரத போராட்டம் மற்றும் சமாதான கூட்டத்தினை வீடியோ கவரேஜ் மற்றும் புகைப்படம்</td>
<td>தீர்மான எண். 413<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | எடுத்தமைக்கு உதயம் போட்டோ மற்றும் வீடியோ உரிமையாளர் திரு.ஜி.சங்கர் அவர்களுக்கு ரூ.4500/— வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>அனுமதிக்கலாம். | |
| | 25 | இந்நகராட்சி சாத்தப்பா பூங்கா வளாகத்தில் நுண் துகள் உரம் தயாரிக்கும் பணிக்கு கூடம் அமைக்க வேண்டியுள்ளது. நகராட்சி பகுதியில் சேகரமாகும் மட்கும் குப்பைகளை கொண்டு இப்பணி செய்ய வேண்டியுள்ளது. அதற்கு சிமெண்ட் தொட்டி, வண்ண பூச்சு கதவு போன்ற பணிகள் மேற்கொள்ளவுள்ளதால் மதிப்பீடு 2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | தீர்மான எண். 414<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | 26 | இந்நகராட்சி குடிநீர் நிதி 2017—18 ன் கீழ் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.17, காந்தி தெரு மற்றும் வார்டு எண்.19 வள்ளலார் தெரு , குறிச்சிப்புரவு, சூடாமணிபுரம் போன்ற தெருக்களுக்கு புதிய குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணிக்28.02.2018—ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 20.03.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வறுமாறு.<br><br>வ.எண். \| ஒப்பந்ததாரர் பெயர் \| ஒப்பந்த சதவீதம்<br>1 \| திரு. டி.முருகன் காரைக்குடி. \| மதிப்பீட்டைவிட —0.63 % குறைவு<br>2 \| திரு. ஆர்.வி.கே. வெங்கடாச்சலபதி , காரைக்குடி. \| மதிப்பீட்டைவிட +1.84% அதிகம்<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. டி.முருகன், காரைக்குடி. அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட— 0.63% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>அ) அனுமதிக்கலாம். | தீர்மான எண். 415<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>27</td>
<td>இந்நகராட்சி குடிநீர் நிதி 2017–18 ன் கீழ் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்கு சொந்தமான சம்பையூற்று தலைமை நீரேற்று நிலைய வளாகத்தில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணிக்கு 28.02.2018–ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 20.03.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வறுமாறு.
<table>
<tr><td>வ.எண்.</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.ஆர்.வி.கே.வெங்கடாச்சலபதி , காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட –0.14 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. டி.முருகன் காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட –1.04 % அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.வி.கே.வெங்கடாச்சலபதி , காரைக்குடி. அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட– 0.14% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :<br>
அ) அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 416<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>28</td>
<td>இந்நகராட்சி குடிநீர் நிதி 2017–18 ன் கீழ் ரூ.1.15 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.3–ல் கழனிவாசல் புதுத்தெருவிற்கு புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு 28.02.2018–ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 20.03.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வறுமாறு.
<table>
<tr><td>வ.எண்.</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>திரு. டி.முருகன் காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட –0.23 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. ஆர்.வி.கே. வெங்கடாச்சலபதி , காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட +2.25% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. டி.முருகன், காரைக்குடி. அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட– 0.23% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :</td>
<td>தீர்மான எண். 417<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>அ) அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>29</td><td>இந்நகராட்சி குடிநீர் நிதி 2017–18 ன் கீழ் ரூ.0.90 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.30–ல் உதயம் நகரில் காளவாய் பொட்டல் பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணறு அருகில் குளோரினேசன் பிளான்டிற்கு ஷெட் அமைக்கும் பணிக்கு 28.02.2018–ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 27.03.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வறுமாறு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.பி. வசந்தா, காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட –0.14 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. கே. சுந்தரபாண்டியன் , காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட +1.50% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.பி.வசந்தா, காரைக்குடி. அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட– 0.14% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>அ) அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண். 418<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>30</td><td>. இந்நகராட்சி குடிநீர் நிதி 2017–18 ன் கீழ் ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.22–ல் சேர்வார் ஊரணி தென்கரையில் உள்ள ஆழ்குழாய் கிணறுக்கு புதிய மின் அறை அமைத்து மின் இணைப்பு வசதி செய்தல் பணிக்கு 28.02.2018–ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 27.03.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வறுமாறு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.பி. வசந்தா, காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட –0.21 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. கே. சுந்தரபாண்டியன் , காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட +2.25% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.பி.வசந்தா, காரைக்குடி. அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட– 0.21% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்</td><td>தீர்மான எண். 419<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>அ) அனுமதிக்கலாம். | |
| | **31** | இந்நகராட்சி முத்தூரணி தொடக்கப்பள்ளியில் உள்ள ஆழ்குழாய் கிணறு மோட்டார் பழுது குழாய்கள் பழுதடைந்துள்ளது. இதனால் பள்ளிக் குழந்தைகள் பயன்பெற இயலாத நிலையில் உள்ளது. எனவே மின்மோட்டார், ஸ்டாட்டர், குழாய்கள் மற்றும் பள்ளி பின்புறமுள்ள குழாய்கள் அமைக்க மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>அ) அனுமதிக்கலாம். | தீர்மான எண். 420<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **32** | காரைக்குடி நகராட்சி பராமரிப்பில் உள்ள பொதுகழிப்பறை, நகர்மன்றப் பள்ளி, அரசு பள்ளி கழிப்பறைகள் மற்றும் நம்ம டாய்லெட்கள் சுத்தம்செய்யும் பணிக்கு பொது மக்களிடம் எவ்வித கட்டணமும் வசூலிக்காமல் இலவசமாக பராமரிக்க பராமரிப்பு செலவினமான மாதம் ஒன்றுக்கு ரூ.5000/— வீதம் 29 கழிப்பறைகள் பராமரிப்பு செய்ய நகர்மன்ற தீர்மான எண்.65 நாள் 16.11.2016, 64 நாள் 20.07.2016, 170 நாள் 28.02.2017 மற்றும் 275 நாள் 30.11.2017, 388 நாள் 28.02.2018ல் அனுமதிள்ளது. மேலும் பள்ளி கழிப்பிடங்கள் ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கை உள்ளதால் தற்போது உள்ள விலை விகிதத்திலேயே தொடர்ந்து 16 பள்ளி கழிப்பிடங்களை பராமரிக்க 01.03.2018 முதல் 03.03.2018 வரையிலான காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.7500/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>1) அனுமதிக்கலாம்.<br>2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 421<br>அலுவலகக்குறிப்புகள் அனுமதிக்கப்பட்டது |

தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி